# 'இசையரங்கம்' வைரமுத்து சொர்ணலிங்கம்

ஆழத்து முத்துக்கள் 163

- ப. ஸ்ரீஸ்கந்தன் -

இசைக்கு ஏது எல்லை நிகழ்ச்சியின் ஸ்தாபகர், நாடக எழுத்தாளர், நாடக நெறியாளர், நிகழ்ச்சி ஒருங்கமைப்பாளர், தொலைக்காட்சி நிகழ்ச்சி தொகுப்பாளர் எனப் பல கலை முகம் கொண்ட கலைஞர் வைரமுத்து சொர்ணலிங்கம் அவர்களை இம்மாத ஆழத்து முத்துக்களில் பதிவு செய்வதில் தாய்வீடு மகிழ்கிறது.

இவர் உடுப்பிட்டியைச் சேர்ந்த வைரமுத்து – பாக்கியம் இணையரின் மகனாக ஜுலை 07, 1950ல் பிறந்தார். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் கல்வி கற்று, கட்டுப்பெத்தை பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி பொறியியலாளராகக் கற்றுத் தேர்ந்தார். பின்னர் இலங்கை சீனிக்கூட்டுத் தாபனத்திலும் புகையிரத இலாகாவிலும் பொறியியலாளராக பணிபுரிந்த சொர்ணலிங்கம் அவர்கள் நாட்டுச் சூழல் காரணமாக நைஜீரியாவுக்குப் பயணமானார்.

1987ல் கனடா மண்ணில் கால்பதித்த பின்னர் அவரது கலைப்பணம் மிகவும் வேகமாக வளர்ச்சி கண்டது. பாடசாலை நாட்களில் பெற்றோர் தின விழாக்களில் பாடல் போட்டிகளில் பரிசுகள் பெற்றதும், பல்கலைக்கழகத்தில் பயிலும் நாட்களில் 'அம்பிகாபதி', 'நளன் தமயந்தி' போன்ற கதாகாலேட்சபத்தில் பங்குபற்றிய அனுபவமும் தீவிரமாக அவரை இயங்க வைத்தது. சங்கீதபூஷணம் பத்மலிங்கம் அவர்களிடம் சிறிது காலம் பயின்ற சங்கீதமும் இவருக்குப் பெரும் பாக்கியமாக அமைந்து போனது.


கல்விகற்ற உடுப்பிட்டி மிஷன் பாடசாலைக்கு உதவி செய்வதற்காக 1989ல் வானவில் என்ற நிகழ்ச்சியை ஆரம்பித்தவர்களில் சொர்ணலிங்கம் அவர்களும் முக்கியமானவர். தமிழர் நடத்தும் நிகழ்ச்சிகளில் குறித்த நேரத்தில் ஆரம்பமாகும் என்ற பெருமைபெற்றது வானவில் நிகழ்ச்சி. சங்கீதத்தில் ஈடுபாடும் ராகங்கள் பற்றிய அறிவும் தேடலும் கொண்டிருந்த இவரிடம் வானவிலின் இசை நிகழ்ச்சிக்கான பொறுப்பு வழங்கப்பட்டது.

தென்னிந்திய சினிமா பாடல்களின் மோகம் பெருகியிருந்த அந்நாட்களில் நாங்கள் ஏன் சொந்தமாகப் பாடல்களைத் தயாரிக்க முடியாது என்று நினைத்து சொர்ணலிங்கம் அவர்கள் முதன் முறையாக கர்நாடக இசை ராகத்தில் அமைந்த 4 பாடல்களைத் தயாரித்தார். 1992ல் நடைபெற்ற வானவில் நிகழ்ச்சியில் இந்தப் பாடல்கள் பாடப்பட்டன. டிமோ சொர்ணலிங்கம், சுகல்யா ரகுநாதன் இருவரும் அப்பாடல்களைப் பாடினர். இவற்றில் இரு பாடல்களை எழுதியதோடு அவற்றுக்கு சொர்ணலிங்கம் மெட்டமைந்துமிருந்தார். மீதி இரு பாடல்களையும் குலநாயகி விவேகானந்தன் எழுதியிருந்தார்.

1995ல் நடைபெற்ற வானவில் நிகழ்ச்சியில் உள்ளூர்க் கலைஞர்களின் இசையமைப்பில் 10 பாட்டுக்கள் பாடப்பட்டன. இப்பாடல்களை பிரபல பாடகர்கள் மோகன், திவ்யராஜன், கிரிதரன் குணரட்ணம் ஆகியோரும் பாடியிருந்தனர். 2000ல் நடைபெற்ற நிகழ்ச்சியில் புகழ்பெற்ற பாடகர் உமா ரமணன் கர்நாடக இசையில் அமைந்த பாடலைப் பாடி பின்னர் அதனது ராகத்தில் அமைந்த சினிமாப் பாடலையும் பாடி சபையோர்க்கு புதிய அனுபவத்தைத் தந்தார். இசையமைப்பாளர் பயாஸ் இந் நிகழ்ச்சிக்கு இசையமைத்திருந்தார். சொர்ணலிங்கம் இதனை தயாரித்தளித்தார்.

இதன் நீட்சியாக ஒரு முழுமையான எம்மவர் பாடல்களைக் கொண்ட மெல்லிசை நிகழ்ச்சியை நடத்தும் நோக்கிலும் எமது கலைஞர்களை ஊக்குவிக்கும் நோக்கிலும் 2000ல் இசையரங்கம் என்ற அமைப்பை ஸ்தாபித்து 'இசைக்கு ஏது எல்லை' என்ற நிகழ்ச்சியை நடத்த ஆரம்பித்தார். எமது கவிஞர்களின் வரிகளுக்கு மெட்டமைக் கப்பட்டு புதிதான இசையில் மெல்லிசைப் பாடல்கள் இந்நிகழ்ச்சியில் பாடப்பட்டன. இசை ரசிகர்கள் மெய்மறந்து இப்பாடல்களை ரசித்தனர். இசைப்பிரியர்களுக்கு இந்நிகழ்ச்சி பெரும் வரப்பிரசாதமாக அமைந்து போனது. 2008 வரை மொத்தம் 21 இசைக்கு ஏது எல்லை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

O.S.அருண், உன்னிக்கிருஷ்ணன், யாதவன், வர்ண ராமேஸ்வரன், கண்ணன், உமா ரமணன், அருட்செல்வி கொட்வின், ஆதிரை சிவபாலன், பிரசாந்தி நிரஞ்சன் போன்ற



பல பிரபல பாடகர்கள் இசைக்கு ஏது எல்லை நிகழ்ச்சியில் பாடி எம்மை மகிழ்வித்தனர். இசையமைப்பில் பயாஸ் ஜவாஹீர் - கீ போட், நாவலன் மற்றும் கீர்த்தனன் திவ்யராஜன் - தபேலா, கஜஜெயன் பரராஜசிங்கம் - மிருதங்கம், ராஜீ ராகவன் - சித்தார் ஆகியோர் பெரும்பாலான நிகழ்வுகளில் பங்குபற்றி பாடகர்களின் ராக ஆலாபனைகளுடன் போட்டி போட்டு சிறப்புச் செய்தனர். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் 2016ல் நடைபெற்ற 22வது இசைக்கு ஏது எல்லை நிகழ்ச்சியில் பாடகர் நிருஜன் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

சொர்ணலிங்கம் அவர்களின் இசை ஆர்வம், இசை ஆற்றலின் இன்னுமொரு வடிவமாக இரு ஒலித்தட்டுக்களை வெளியிட்டுள்ளார். இவரது முதலாவது வெளியீடான 'மெல்லக் கசிந்தது' ஒலித்தட்டில் 7 பாடல்கள் பதியப்பட்டுள்ளன. இப்பாடல்களை யாதவன், வர்ண ராமேஸ்வரன், சௌமியா, கார்த்திக், சுகல்யா ரகுநாதன், அருட்செல்வி கொட்வின், சிந்து மோகன் ஆகியோர் பாடியிருந்தனர். இவற்றில் 6 பாடல்களை கலைவாணி ராஜகுமாரனும் மற்றைய பாடலைக் கலைஞர் சேரனும் எழுதியிருந்தனர். இப்பாடல்களில் ஒன்றை வர்ண ராமேஸ்வரனும் இன்னுமொரு பாடலை உமா ரமணனும் மீதிப் பாடல்களை சொர்ணலிங்கமும் மெட்டமைத்திருந்தனர்.

'இசையெனும் மழைதனில்' என்னும் அடுத்த ஒலித்தட்டில் மொத்தம் 27 மெல்லிசைப் பாடல்கள் உள்ளன. ஒன்பது ஈழத்துக் கவிஞர்கள் எழுதிய பாடல்களை இருபதுக்கு மேற்பட்ட பாடகர்கள் பாடியிருந்தனர். புதிய வரிகள், புதிய மெட்டுக்களுடன் எமக்குப் பரீட்சயமான உணர்வலைகளைக் கிளர்த்துகிற பாடல்களாக அவை அமைந்திருந்தன.

இசைத்துறையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டாலும் பல நாடகங்கள் ஒழுங்கில்லாமல் அரைகுறையாக மேடையேற்றப்படுவதைக் கண்டு வெறுப்புற்ற சொர்ணலிங்கம் அவர்கள் நாடகத் துறையிலும் கால்பதிக்கத் தொடங்கினார். நேரம், கட்டுப்பாடு, ஒழுங்கு, நேர்த்தி என் பவற்றுக்குப் பேர்போன இவர் 1991 கலைஞன் அம்பலவாணர் கேதிஸ்வரனுடன் இணைந்து 'இது இப்படித்தான்' என்ற நாடகத்தை வானவில் நிகழ்ச்சியில் மேடையேற்றினார். இளைஞர் யுவதிகளுக்கிடையே நிகழும் 'டேட்டிங்' என்பதைக் கருப்பொருளாக இந்நாடகம் கொண்டிருந்தது.

இவ்வாறு அந்தந்த காலகட்டத்தில் எமது சமூகத்தில் நிலவும் சீர்கேடுகளை வெளிப்படுத்தும் விழிப்புணர்வு நாடகங்களாக இது சரிதானா, இது நடக்குமா, இது ஏமாற்றமா, இது வாழ்க்கையா, இது எழுதா விதியா, இது தேவை தானா, இதுதான் நாளைக்கு என எமது சமூகத்தில் புரையோடும் சம்பவங்களை, நிகழ்வுகளை 'இது' என விழித்து பல்வேறு கருத்தாழமிக்க நாடகங்களை சொர்ணலிங்கம் மேடையேற்றினார்.

நாடகம் மட்டுமல்லாது எமது பாரம்பரிய கலைவடிவமான கூத்திலும் ஆர்வம்கொண்டு வானவில் நிகழ்ச்சிக்காக 'எங்கட சனங்கள்' பகுதி 1,2,3,4,5, என ஐந்து வருடங்கள் கூத்தை நிகழ்த்தினார். இந்த நாட்டுக் கூத்துக்களில் மூத்த கலைஞர் அழகையா, செந்தூரன் அழகையா, டிமோ சொர்ணலிங்கம், அருட்செல்வி, திவ்யராஜன், தாரணி, பாவனா, ஸ்ரீ முருகன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர். வாசு சின்னராசா அவர்களிடம் நடிகர்கள் ஆட்டங்கள் பயில இந்தக்கூத்துக்களை சொர்ணலிங்கம் நெறியாள்கை செய்திருந்தார். கலைஞர்களை இனம் கண்டு எமது பாரம்பரிய கலை வடிவங்களை கனடா மேடைகளில் அறிமுகம் செய்ததில் இவருக்குப் பெரும் பங்குண்டு.

வானவில் நிகழ்ச்சிக்காக இவர் நெறியாள்கை செய்து தயாரித்தளித்த 'மயான காண்டம்' இசை நாடகம் கனடா மேடை நாடகத்தில் ஒரு மைல்கல். மண்ணில் இசை நாடகங்களைச் சுகிர்த்த இசைநாடகம் பிரியர்களுக்கு இந்நாடகம் பெரும் விருந்தாக அமைந்தது. சிறந்த பாடகரான செந்தூரன் அழகையா அரிச்சந்திரனாகத் தோன்றி நாடகப் பாடல்களைச் சிறப்பாகப் பாடியதுடன் திறமாக நடித்து நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்களைக் கண்முன் நிறுத்தினார். இதேபோல் அருட்செல்வியும் சந்திரமதி பாத்திரத்துக்குச் சிறப்புச் செய்தார். இந்நாடகத்துக்கு பயஸ் ஹார்மோனிய இசை வழங்கினார்.

கவிஞர் செழியனின் கவிதைகளைத் தொகுத்து கவிதா நிகழ்வொன்றையும் சொர்ணலிங்கம் நெறியாள்கை செய்து மேடையேற்றினார். இதில் சேகர், அருட்செல்வி ஆகியோர் நடித்திருந்தனர்.

மனவெளி கலையாற்றுக் குழுவினரின் அரங்காடல் நிகழ்ச்சியில் மேடையேற்றிய 'துளிரும் சருகுகள்' இவரின் முக்கியமானதொரு நாடகமாகும். இந்நாட்டில் எமது முதியோர் படுகின்ற இன்னல்களை, துயரங்களை இந்நாடகம் சொன்னது. சிறப்பாக ஒலி, ஒளி அமைப்பு செய்யப்பட்டு நேர்த்தியாக மேடையேற்றப்பட்ட இந்நாடகத்தில் பிரபல கலைஞர்கள் குரும்பசிட்டி இராசரத்தினம், அன்ரன் பீலிக்ஸ் ஆகியோர் சிறப்பாக நடித்திருந்தனர். சொர்ணலிங்கம் இந்நாடகத்தை எழுதி இயக்கியிருந்தார்.

இசை, நாடகம் என்பவற்றுக்கு அப்பால் TV1 தொலைக்காட்சியில் இவர் அளித்த 'கலைமுற்றம்' என்ற நேர்காணல் நிகழ்ச்சி மிகவும் பிரபல்யமானது. இம்மண்ணில் உழைப்பால் உயர்ந்த எம்மவர்களை ஊக்குவிக்கும் முகமாக இந்நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் பின் நாளில் புகழ்மிக்க இசைக்கலைஞர்களை, கலை ஆளுமைகளை நேர்காணுகிற நிகழ்ச்சியாக இது உயர்ந்து நின்றது. பாலமுரளி கிருஷ்ணா, யேசுதாஸ், கலியமூர்த்தி, பி.எ.சுந்தரம், க.பாலேந்திரா போன்ற எண்ணற்ற கலைஞர்கள் கலைமுற்றத்தில் பங்குபற்றியிருந்தனர். இசை நுணுக்கங்கள் பற்றிய அறிவும் கலைகள் குறித்த தேடலும் சொர்ணலிங்கம் அவர்களிடம் இருந்ததால் கலைமுற்றம் நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக அமைந்தது.

கலைகள் மீது இவர் செலுத்தும் பொறுப்பும் நேர்த்தியும் நிர்வாகத்திறனும் இவரது இசை, நாடகத் துறைகளின் வெற்றிக்கு மூலகாரணங்களாகும். இதேபோல் 1990ல் சொர்ணலிங்கம் ஆரம்பித்த Yarl Metal என்ற நிறுவனம் தொடர்ந்து வெற்றிகரமாக இயங்கி வருவது அவரது ஆற்றலுக்கு இன்னுமொரு உதாரணமாகும்.

சொர்ணலிங்கம் அவர்கள் கலைவடிவங்கள் ஊடாக எமது இனத்தின் அடையாளத்தை நிலைநிறுத்த முயல்வோரின் முன்னோடி. கலைகளை அவமதிக்கும் செயல்களைக் கண்டு கொதித்தெழும் கோபக்காரன். ஆனால் பழகுவதற்கு இனிமையான மனிதர்.



sriskandan@thaiveedu.com